லங்காபுர பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்காபுர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்காபுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் இலக்கத்தின் ஈ.ஜி 4.6 பிரகாரம் ஊழியர் கடன் மற்றும் முற்பணத் தொகை உட்பட அனைத்து வகையிலும் பெற வேண்டியவைகளுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீராக்கவுதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 6.20 இன் பிரகாரம் அறிக்கை இடப்படுகின்ற காலப்பகுதியின் இறுதி திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு சொத்துக்களுக்கு உரிய கிரயம் திரண்ட பெறுமானத்தேர்வு வருடாந்த பெறுமான தேய்வு மற்றும் தேறிய பெறுவுமதியை குறிப்பிட்டு அட்டவணைகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்களின் தேறிய பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டு அட்டவணைகள் தயாரித்து சமர்.ப்பிக்கப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் சீராக்கவுதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 பொருத்திகளுக்கு உரிய ரூபா 810,300 ஆன வருடாந்த பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் வருடாந்த ஒரு பெறுமான தேய்வு அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது	2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 2024 ஆம் ஆண்டின் போது பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட உரிய ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யப்பட வில்லை என்பதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும
(ஆ)	15 உருப்படிகளுக்குரிய ரூபா. 786,474 தொகை மீதிகள் மற்றும் 18 உருப்படிகளுக்குரிய 464 பொருள் உருப்படிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்குகள் செய்யப்பட வேண்டும்
(இ)	ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா. 620,220 பெறுமதியான 05 உருப்படிகள் களஞ்சிய இருப்பு மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டு இருந்தன.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும
(ஈ)	நிர்மாண கடன் கொடுத்தோர் மீதி ரூபா. 34,808,790 தொகை குறைத்தும் நிர்மாண கடன்பட்டோர் மீதி ரூபா. 31,478,306 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும
(உ)	நானாவித வைப்பு கணக்கு ரூபா. 148,520 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	பொது நாட்குறிப்பில் பெறுமதி தவறாக பதிவு செய்யப் பட்டுள்ளதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும
(ஊ)	பெறவேண்டிய ரூபா.101,375 ஆன சூரிய சக்தி முறைமையின் நிலுவை வருமானம் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	மல கழிவுப்பொருள் முறைமைக்கு கழிவுகளை விடுவிக்கும் கட்டண வருமானம் ரூபா. 625,050 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 125,500 நிலுவை வருமானம் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	நிலையான கட்டளை மீது மேற்கொள்ளப்படு கின்ற கொடுக்கல் வாங்கல்கள் கொடுப்பனவுகளுக்கு	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	சீராக்கம் செய்யாமை காரணமாக ரூபா. 452,595 ஆன செலவினம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது		
(ஐ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கொடுப்பனவு செய்து முடித்த 07 நிர்மாண கடன்பட்டோருக்குரிய ரூபா 2,420,829 பெறுமதியான நிர்மாண கடன்பட்டோர் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு இருக்கவில்லை	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஒ)	சேமிப்பு வட்டி வருமானம் ரூபா 179,868 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா. 589,101 பெறுமதியான கடன் கொடுத்தோர் மீதி மற்றும் செலவின கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஔ)	மூலதன மானியங்களின் கீழ் எடுக்கப்படாத மூலதன தன்மையில் எடுக்கப்படாத மற்றும் சபைக்கு உரித்தல்லாத சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் மற்றும் முன்னை ஆண்டின் போதும் கிடைத்த உதவி மானியங்கள் கீழ் பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதி ரூபா. 4,037,273 ஆல் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(க)	மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட 10 கட்டிடங்களுடன் தொடர்புடைய ரூபா 38,682,998 மற்றும் 09 பாலங்கள், மதகுகள் மற்றும் பிற நிர்மாணங்களுடன் தொடர்புடைய ரூபா 24,141,828 உட்பட ரூபா 62,824,826 பெறமதியான 19 நிர்மாண நிலுவைகள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் காண்பிக்கப்படவில்லை.	சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கா)	காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் உருவான காசுப் பாய்ச்சல் கணக்கீடு செய்யும் போது வேறு நடைமுறை பொறுப்புகள் குறைவாக ரூபா. 5,372,723 தவறாக காட்டப்பட்டிருந்தது	பரீட்சித்து பாரத்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கி)	முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான காசு பாய்ச்சல் கணக்கீடு செய்யும் போது ரூபா. 15,000,000 ஆன நிலையான வைப்புகளை காசாக்குவது பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை	பரீட்சித்து சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(கீ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 211,500 ஆன 02 இயந்திரங்களின் பெறுமதி இயந்திர கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை	சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(கு)	சூரிய சக்தி மின்னூட்ட முறைமையில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் மட்டும் இலங்கை மின்சார சபை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மின்சாரத்துக்கு இடையே வேறுபாட்டை கணக்குகளில் சீராக்கம் செய்த காரணத்தினால் சூரிய பௌல் வருமானம் ரூபா. 725,718 மற்றும் மின்சார செலவு ரூபா. 200,803 கணக்கில் காண்பிக்கப்பட்டி ருக்கவில்லை	சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 07 கணக்கு மீதிகளின் பெறுமதி பயன்பாட்டு ஆவணங்கள் மீதிகளுடன் ஒப்பிடும்டே பாது ரூபா 4,953,004 இணக்கமின்மை காணப்பட்டது.	பரீட்சித்து பாரத்து சீராக்கம் செய்வதாக	கணக்கு புத்தகங்கள் சீராக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதிகள் பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 52 கணக்கு மீதிகளின் பெறுமதி பொது பேரேட்டிலும் அக்கணக்குகளின் மீதிளுடன் ரூபா 14,882,054 இணக்கமின்மை காணப்பட்டது.	பரீட்சித்து பாரத்து சீராக்கம் செய்வதாக	கணக்கு புத்தகங்கள் சீராக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதிகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட மொத்தம் ரூபா 4,255,871 ஆன சொத்துக்கள் மீதியொன்று 6 பொறுப்பு மீதிகள் மற்றும் 20 வருமானம் மீதிகளுக்குரிய ஆவணங்கள் அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்காமை காரணமாக திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய அல்லது பரீட்சிக்க முடியாது இருந்தது.	எதிர்காலத்தில் உரிய சான்றுகள் சமர்ப்பிக்க வேணடியுள்ளதாக	உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**சட்டங்கள்**			
	1988 இன் 56, 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (அ) பகுதி	பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டு வருகின்ற சுங்காவில் கழிவு பொருள் முகாமைத்துவ நிலையம் மற்றும் மலக் கழிவு முறைமைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் அனுமதிப் பத்திரத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரிவு 14. 01 (ஊ) மற்றும் (எ)	ஓய்வூதியத்தை மாற்றுவதற்காக ரத்துச் செய்ய முடியாத உறுதி மொழிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,250,000 இடர் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.	ஏற்றுக்கொள்வதாக	தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பொது நிர்வாக சுற்றறிக்கை			
(i)	1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	சபையின் 06 வாகனங்களுக்காக அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்கவில்லை	வாகனங்களின் க்கவாட்டில் அரச சின்னங்களை பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ii)	2016 திசெம்பர் 29 ஆம் திகதி 30/2016ம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்ச செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	06 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,259,421 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,789,264 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	2,551,200	852,640	932,790	80,150	858,400	607,190	807,650	408,850
(ii)	வாடகை	27,957,100	23,851,886	23,883,899	2,012,857	20,554,415	18,281,261	18,918,649	1,980,844
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	694,540	599,466	627,416	27,950	1,147,560	348,787	458,487	220,600
(iv)	ஏனைய வருமானம்	73,771,590	49,461,616	48,800,610	661,006	4,412,260	4,409,483	4,258,622	643,629
		104,974,430	74,765,608	74,244,715	2,781,963	26,972,635	23,646,721	24,443,408	3,253,923

- சபை செயலாளரினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்களில் கணித ரீதியான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வாடகை		
2006 முதல் 2011 வரை மாட்டிறைச்சி கடைகளை வாடகைக்கு எடுத்ததற்காக 9 குத்தகையாளர்களிடமிருந்து நிலுவையில் உள்ள ரூபா 1,348,221 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்		
மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 23,557,700 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 9,500,106 ஆக இருந்தது.	ஏற்றுக்கொள்வதாக	நிர்ணயிக்கப்பட்ட வருமானங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

.3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 23 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்வதாக.	பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
முன்னைய ஆண்டுகளில் பேக்கோலோடரின் பின்பக்க கண்ணாடிகள் இரண்டும் மற்றும் இடது பக்க ஓரக் கண்ணாடி உடைந்திருந்த போதும் குறித்த சேதம் தொடர்பாக நி.ப. 104 பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு	பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முகாமைத்துவ செயற்றிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மனிதவள திட்டத்தில் 2024 ஆம் ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் செய்யப்பட்ட 10 விடயங்களுக்குரிய 10 பயிற்சி செயலமர்வுகள் ஆண்டு பூராவும் 21 நாட்களை மேவுகை செய்யப்படும் வகையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் எந்த ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்படாதிருந்ததுடன் பயிற்சி நிகழ்ச்சிக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	திட்டத்தின் பிரகாரம் பயிற்சி செயலமர்வுகள் நடத்தப்பட வேண்டும்
(ஆ)	பிரதேச சபை உரிமை கொண்டுள்ள 18 காணிகள் 20 மயானங்கள் மற்றும் 06 விளையாட்டு மைதானங்கள் உட்பட ரூபா. 77,282,000 பெறுமதியான 44 காணிகளின் உரித்தை பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	உரித்தை கையேடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சுற்றாடல் அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 07 வகை கூறிய 105 நிறுவனங்கள் வியாபார அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொண்டிருக்கவில்லை அதில் 42 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் செயற்பட்டிருந்ததுடன் அனுமதிபத்திரத்தை பெற்றுக் கொள்வதன் பேரில் சபைக்கு ரூபா 168,000 இற்கு அண்மித்த வருமானம் ஒன்று இழக்கப்பட்டு இருந்தது.	சுற்றாடல் பாதுகாப்பு பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்கு மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதாக.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.
(ஈ)	பிபிதெமு பொலன்னறுவ செயற்திட்டம் மூலம் 2021 தெசம்பர் 10 ஆம் திகதி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டு இருந்த 11 பொருள் உற்பத்திகளுக்குரிய 286 பொருள் அலகுகள் இருப்பு	இருப்பு பதிவேடுகளுக்கு உட்பட்டதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்த வேண்டும்.

	பதிவேடுகளுக்கு உள்ளடக்காமல் 3.2.1 அங்குல GI குழாய்கள் மற்றும் 16 mm சுற்று உருக்கு வெவ்வேறு நடவடிக்கைகளாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு வழங்கப்படாத பொருட்கள் மீதியொன்றாக களஞ்சியத்தில் காணப்பட்டன.		
(உ)	நிர்மாணத்திற்காக பொருத்தமான இடம் ஒன்று மற்றும் பொருத்தமான சுற்றாடல் காரணிகளை ஆய்வு செய்யாமல் ரூபா. 3,868,099 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த ரிபாய்புர இலத்திரனியல் நூலக கட்டிட பொது மயானத்திற்கு அனுமதித்ததாக நிர்மாணிக்கப்பட்டு இருந்தது.	அரசியல் அதிகாரிகள் மூலம் இடம் தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	பொருத்தமான இடங்களை இனங் கண்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 நவம்பர் 21 ஆம் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் 2/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டு வாகனங்களை உரித்தைக் கையேற்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை.	உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 விளைவற்ற குறைப்பயன்பாட்டிலுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா. 179,863,914 ஆன பெறுமதியான 08 உருப்படிகள் மற்றும் பெறுமதி மதிப்பட முடியாத 05 சொத்து விடயங்களுக்குரிய சொத்துக்கள் 13 சொத்துக்கள் வெவ்வேறு காரணத்தின் பேரில் 02 ஆண்டுகள் முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பபட்டன.	ஏற்றுக் கொள்வதாக.	சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபை செயலாளர் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட 11 பதவிகளுக்குரிய 17 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சுகாதார தொழிலாளர் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளுக்காக 08 உத்யோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர்.	உள்ளூராட்சிமன்ற திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக.	வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் மிகை ஊழியர்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவும் வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையின் நூலக உதவியாளர் வீதி தொழிலாளர், சுகாதார மற்றும் நீர் தொழிலாளர் போன்ற பதவிகளில் சேவை புரியும் 12 உத்தியோகத்தர்கள் தமது நிரந்தர பதவிகளுக்குரிய அல்லாத முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், வருமான பரிசோதகர்கள், நூலகர் மருந்து கலப்பவர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றி வந்தனர்	சபையின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக	நிரந்தர பதவிகளில் சேவையை ஈடுபடுத்தப்பட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
செயல் நடவடிக்கை திட்டத்தில் இல்லாத 07 அபிவிருத்தி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டு ரூபா 36,467,018 ஆன செலவினமொன்று செலவிடப் பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 05 அபிவிருத்தி வேலைகள் மீளாய் ஆண்டில் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் செயல் நடவடிக்கை திட்டம் மிக கவனமாகவும் பயனுடையதாகவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை மிடப்பட்ட	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	திட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2015 மார்ச் 18 ஆம் திகதி 4/2015 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1.3 இன் பிரகாரம் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாத இறுதியில் பொதுச்சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொண்டு நிறுவனத்தின் பணிகள் மற்றும் இலக்குகளை செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருக்க வில்லை.	சரி செய்து கொள்வதாக	சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.3 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் சபையில் பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினத்துடன் பரீட்சித்த போது 13 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 2,112,750 ஆன மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டு இருந்ததுடன் மேலும் 84 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை அதாவது ரூபா 3,800 இலிருந்து 5,608,530 வரை யான வீச்சில் சேமிக்கப்பட்டமை காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதி வழிகாட்ட லாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	வெவ்வேறு காரணங்களின் பேரில் வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக	பாதீடு ஆக்கப்பூர்வமான நிதி கட்டுப்பாட்டு வழிகாட்டல் ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும்

4.4 சுற்றாடல் சிக்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் ரூபா 167,493,875 ஆன நிதி ஏற்பாட்டின் பேரில் இறுதி ஏற்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட ஜுங்காவில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் கவர்ச்சிமா இயந்திரத்திற்காக போதியளவு கழிவு பொருள் இல்லாமல் கிடைக்காததன் பேரில் செயல்படுத்தாமல் மனித உழைப்பை சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.	ஏற்றுக் கொள்வதாக	இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்

4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் பிரதேச சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டின் போது நிகழ்சசிகள் வேறாக இனங்காணப்பட வேண்டுமென்பதாக	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.